


**18.12. 2024**

## தலைப்புச் செய்திகள்

1. எதிர்கட்சிகளின் அமளியால் நாடாளுமன்ற இரு அவைகளும் பிற்பகல் 2 மணிவரை இன்று ஒத்திவைக்கப்பட்டன.

2. தேசிய கல்வி கொள்கை 2020-ஐ சிறுபான்மை கல்வி நிறுவனங்களும் நடைமுறை படுத்த வேண்டும் என்று மத்திய கல்வி அமைச்சர் திரு.தர்மேந்திர பிரதான் கேட்டுக்கொண்டுள்ளார்.

3. தமிழ்நாட்டில் கனவு இல்லம் திட்டத்திற்கு கூடுதலாக 400 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படுவதாக முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

4. பொங்கல் சிறப்பு தொகுப்பு விற்பனையை மாநில கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு.பெரியகருப்பன் சென்னையில் இன்று தொடங்கிவைத்தார்.

5. பிரிஸ்பேனில் இந்திய ஆஸ்திரேலிய அணிகளுக்கிடையிலான 3-வது டெஸ்ட் கிரிக்கெட் போட்டி ட்ராவில் முடிவடைந்தது.

### இனி விரிவான செய்திகள்

**********

நாடாளுமன்றம்

நாடாளுமன்ற இரு அவைகளிலும் ஆளும் கட்சி மற்றும் எதிர்கட்சி உறுப்பினர்களிடையே கடும் வாக்குவாதம் ஏற்பட்டதால் பிற்பகல் 2 மணிவரை இரு அவைகளும் ஒத்திவைக்கப்பட்டன.

மக்களவை இன்று கூடியதும் காங்கிரஸ், திமுக, இடது சாரி உள்ளிட்ட எதிர்கட்சிகள் அவையின் மைய பகுதியில் குழுமி உள்துறை அமைச்சர் திரு.அமித்ஷாவின் கருத்துக்கு எதிராக குரல் எழுப்பி முழக்கமிட்டனர்.

எதிர்கட்சிகளின் செயலுக்கு நாடாளுமன்ற விவகாரத்துறை இணை அமைச்சர் திரு.அர்ஜுன்ராம் மெஹ்வால் மற்றும் ஆளும் கட்சி உறுப்பினர்கள் கண்டனம் தெரிவித்தனர்.

இதனால் நிலவிய கூச்சல் குழப்பங்களால் மக்களவை பிற்பகல் 2 மணிவரை ஒத்திவைக்கப்பட்டது.

மாநிலங்களவையிலும் இதே நிலைமை காணப்பட்டதால் பிற்பகல் 2 மணிவரை அவைத்தலைவர் அவையை ஒத்திவைத்தார்.

இதனிடையே எதிர்கட்சிகள் நாடாளுமன்ற வளாகத்தில் திரு.அமித்ஷாவிற்கு எதிராக ஆர்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

***********

**கிரண் ரிஜிஜு**

இதனிடையே எதிர்கட்சிகள் திரு.அமித்ஷா கூறிய கருத்தை திரித்து கூறுவதாக நாடாளுமன்ற விவகாரத்துறை அமைச்சர் திரு.கிரண் ரிஜிஜு குற்றம் சாட்டியுள்ளார்.

நாடாளுமன்ற இரு அவைகளின் செயல்பாட்டை எதிர்கட்சிகள் முடக்கியிருப்பதாக அவர் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

***********

**தர்மேந்திரபிரான்**

ஏழை எளியோர் குறிப்பாக சிறுபான்மையினரின் வாழ்வாதாரத்தை மத்திய அரசு கடந்த 10 ஆண்டுகளில் உயர்த்தியிருப்பதாக மத்திய கல்வி அமைச்சர் திரு.தர்மேந்திர பிரதான் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் சிறுபான்மையினர் கல்வி நிறுவனங்களுக்கான தேசிய ஆணைய நிறுவன நாள் நிகழ்ச்சியில் இன்று உரையாற்றிய அமைச்சர் அனைவருக்கும் வளர்ச்சி என்ற கோட்பாட்டுடன் அரசு செயல்படுவதாக கூறினார்.

பிரதமரின் வீட்டுவசதி திட்டம் மற்றும் சமையல் எரிவாயு திட்டம் ஆகியவை ஏழை எளிய மக்களின் வாழ்வாதாரத்தை பெருமளவு உயர்த்தியுள்ளதாக அவர் எடுத்துரைத்தார்.

கல்வி நிறுவனங்கள் குறிப்பாக சிறுபான்மை கல்வி நிறுவனங்கள் தேசிய கல்வி கொள்கை 2020-ஐ முறையாக நடைமுறை படுத்த அவர் வலியுறுத்தினார்.

புதிய தொழில்நுட்பங்கள், திறன்மேம்பாடு வளர்ச்சிக்கு ஏற்றவாறு தரத்தை உயர்த்தி கொள்வதன் மூலமே எதிர்கால அறிவுசார் பொருளாதாரத்தில் இந்தியா முன்னிலை பெற முடியும் என்று குறிப்பிட்டார்.

***********

**கிஷன்ரெட்டி**

நாட்டின் ஒருமைப்பாட்டிற்கும், கலாச்சார வரலாற்றிற்கும் மொழிகள் இன்றியமையா அடித்தளமாக திகழ்வதாக மத்திய சுரங்கத்துறை அமைச்சர் திரு.ஜி.கிஷன்ரெட்டி தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர் கட்டமைப்பு, பொருளாதாரம், வேளாண் மேம்பாடுகளுடன், கலாச்சார மேம்பாட்டிற்கும், ஒருமைப்பாட்டிற்றும் மத்திய அரசு உயர் முன்னுரிமை வழங்குவதாக எடுத்துரைத்தார்.

நம் நாட்டில் 121 முக்கிய மொழிகள் உள்ளதாகவும்,

ஆயிரத்து 600 வழக்குமொழிகள் உள்ளதாகவும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

மொழி என்பது பாரம்பரிய கலாச்சாரத்தின் மரபாக திகழ்கிறது என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

எனவே மொழிகளையும், பேச்சு வழக்கு மொழிகளையும் பாதுகாத்து பராமரிக்க மத்திய அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டிருப்பதாக கூறினார்.

***********

செபி

முதலீடு தொடர்பான ஆலோசனைகளை வழங்க விரும்புபவர்கள் **முதலீட்டு ஆலோசனை ஒழுங்குமுறை அமைப்பு** 2013-ன் கீழ் பதிவு செய்திருக்க வேண்டும் என்று பத்திர பரிவர்த்தனை வாரியம் செபி அறிவித்துள்ளது.

முதலீட்டு ஆலோசகர்களுக்கான உத்தேச திருத்த சட்டங்களை நேற்று அறிவித்த செபி நிறுவனம் முதலீட்டு ஆலோசனைகளில் செயற்கை நுண்ணறிவு பயன்பாட்டிற்கு வகை செய்யப்பட்டுள்ளதாக கூறியுள்ளது.

முதலீட்டு ஆலோசனை தொடர்பான வலைதள பராமரிப்பிற்கான புதிய நெறிமுறைகளையும் செபி வெளியிட்டுள்ளது.

***********

பெரம்பலூர் வாய்ஸ்

பெரம்பலூர் அண்ணாமலை பல்கலைகழக தொலைதூரம் மற்றும் இணையவழி கல்வி கற்றல் ஆதரவு மையத்தை இதன் இயக்குனர் சீனிவாசன் இன்று திறந்துவைத்தார்.

வரும் ஜனவரி மாதம் செயற்கை நுண்ணறிவு, Data Science சைபர் பாதுகாப்பு பிரிவுகளில் தொலைதூர பட்டயபடிப்பு தொடங்கப்பட உள்ளதாக அவர் கூறினார்.

வாய்ஸ்

***********

முதலமைச்சர் -கனவு இல்லம்

தமிழ்நாட்டில் கனவு இல்லம் திட்டத்திற்கு கூடுதலாக 400 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படுவதாக முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

சென்னையில் இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் இத்திட்டத்தின் கீழ் நடப்பு நிதியாண்டில் ஒரு லட்சம் வீடுகள் கட்டிமுடிக்கப்பட்டு மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவர நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக கூறினார்.

குடிசை இல்லா தமிழ்நாடு என்ற இலக்கை எட்டும் வகையில் வரும் 2030ஆம் ஆண்டிற்குள் ஊரக பகுதிகளில் 8 லட்சம் வீடுகள் புதிதாக கட்டப்படும் என்றும் முதலமைச்சர் தெரிவித்தார்.

இதனிடையே நான் முதல்வன் திட்டத்தின் கீழ் திறன் மற்றும் பயிற்சி வேலைவாய்ப்பு மையத்தை திருச்சி ஸ்ரீரங்கம் சேதுராப்பட்டி அரசு பொறியியல் கல்லூரியில் முதலமைச்சர் இன்று பிற்பகல் காணொலி மூலம் தொடங்கிவைக்கிறார்.

***********

முதலமைச்சர் புதுமைப்பெண்

தமிழகத்தில் விரிவாக்கம் செய்யப்படும் புதுமைபெண் திட்டத்தை முதலமைச்சர் வரும் 30ஆம் தேதி தூத்துக்குடியில் தொடங்கிவைக்கிறார்.

அரசு உதவிபெறும் பள்ளிகளில் பயிலும் மாணவிகளுக்கும் உயர்கல்வியின்போது மாதந்தோறும் ஆயிரம் ரூபாய் உதவிதொகை வழங்க இந்த திட்டம் வகை செய்கிறது,

***********

பெரியகருப்பன்

தமிழ்நாட்டில் கூட்டுறவுத்துறை சார்பில் பொங்கல் சிறப்பு தொகுப்பு விற்பனையை மாநில கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு.பெரியகருப்பன் சென்னையில் இன்று தொடங்கிவைத்தார்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர் 3 விலைகளில், இந்த சிறப்பு திட்டம் அறிமுகம் செய்யப்பட்டுள்ளதாக கூறினார்.

வாய்ஸ்

***********

**கணேசன்**

தமிழ்நாட்டில் புதிதாக 10 அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள் திறக்கப்பட்டுள்ளதாக மாநில தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு.சி.வி.கணேசன் தெரிவித்துள்ளார்.

சென்னையில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர் 111 கோடி ரூபாய் செலவில் இவை திறக்கப்பட்டுள்ளதாகவும், இளைஞர்கள் வேலைக்கேற்ற திறன்பெறவும், மனித வளத்தை பெருக்கவும் இவை வழிகோலும் என்றார்.

நாமக்கல் திண்டுக்கல் புதுக்கோட்டை திருவாரூர் உள்ளிட்ட மாவட்டங்களில் இந்நிலையங்கள் திறக்கப்பட்டுள்ளன.

***********

**தண்ணீர் திறப்பு**

திருநெல்வேலி மாவட்டம் பிசான பருவ சாகுபடிக்காக கொடுமுடியாறு நீர்த்தேக்கத்திலிருந்து இன்று தண்ணீர் திறக்கப்பட்டது.

பேரவைத்தலைவர் திரு.அப்பாவு அணையிலிருந்து தண்ணீர் திறந்துவைத்தார்.

இந்த தண்ணீரின் மூலம் நாங்குநேரி வள்ளியூர் வட்டாரத்தில் 5 ஆயிரத்து 781 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும்.

***********

**கே.ஆர்.பி.**

கிருஷ்ணகிரி கே.ஆர்.பி. அணையிலிருந்து 2ஆம் போக பாசனத்திற்கான தண்ணீரை ஆட்சித்தலைவர் திருமதி சரயு இன்று திறந்துவைத்தார்.

இதுகுறித்து எமது செய்தியாளர்

வாய்ஸ்

***********

**உங்களை தேடி உங்கள் ஊரில்**

உங்களை தேடி உங்கள் ஊரில் திட்டத்தின் கீழ் திருச்சி நவலூர் குட்டப்பட்டு கிராமத்தில் அங்கன்வாடி மையம், கோமாரி நோய் தடுப்பூசி முகாம், துணை சுகாதார நிலையம் உள்ளிட்டவற்றின் பணிகளை ஆட்சித்தலைவர் திரு.மா.பிரதீப்குமார் இன்று பார்வையிட்டார்.

நியாயவிலைக்கடைகளில் பொருட்களின் தரத்தையும் இருப்பையும் அவர் ஆய்வு செய்தார்.

***********

**சிவகங்கை வாய்ஸ்**

சிவகங்கை மாவட்டத்தில் மாநில அரசின் கைவினை திட்டத்தின் கீழ் கடனுதவி பெற தகுதியுடையோர் விண்ணப்பிக்கலாம் என ஆட்சித்தலைவர் திருமதி ஆஷா அஜித் தெரிவித்துள்ளார்.

**இதுகுறித்து எமது செய்தியாளர்**

**வாய்ஸ்**

***********

இருவரி

பெரம்பலூர் மாவட்டத்தில் சூரிய ஒளி மின்சாரத்தை முழுமையாக பயன்படுத்தும் வகையில் மின்மோட்டாரை பகல் நேரங்களில் உபயோகப்படுத்த வேண்டும் என்று மின்வாரியம் அறிவுறுத்தியுள்ளது.

சூரிய ஒளி மின்சாரத்தை பகலில் அதிகமாக பயன்படுத்துவதன் மூலம் மாசுபாடு குறைவதாக மின்வாரியம் சுட்டிக்காட்டியுள்ளது.

புதுக்கோட்டை, திருப்பத்தூர் மாவட்டங்களில் தனியார் துறை வேலை வாய்ப்புமுகாம் நாளைமறுநாள் நடைபெறுகிறது.

சேலத்தில் ஆட்சிமொழி சட்ட வார விழாவை ஒட்டி இசைக்கல்லூரி மாணாக்கரின் விழிப்புணர்வு பேரணி இன்று நடைபெற்றது.

கன்னியாகுமரி கடலில் அமைந்துள்ள திருவள்ளுவர் சிலையின் வெள்ளிவிழாவை ஒட்டி நடைபெறும் திருக்குறள் போட்டிகளில் படைப்புகளை அனுப்ப இன்று கடைசி நாளாகும்.

***********

கடத்தல்

தஞ்சை அருகே காரில் கடத்த முயன்ற 20 லட்ச ரூபாய் மதிப்பிலான 103 கிலோ போதை பொருட்களை காவல்துறையினர் பறிமுதல் செய்துள்ளனர்.

இதனிடையே ஈரோடு ரயில்நிலையத்தில் 35 லட்ச ரூபாய் மதிப்பிலான போதை பொருட்களை இரண்டு பேரிடம் இருந்து போலீஸார் கைப்பற்றியதோடு அவர்களிடம் விசாரணை மேற்கொண்டுள்ளனர்.

***********

வானிலை

தென்மேற்கு வங்க கடல் பகுதியில் நிலவிய காற்றழுத்த தாழ்வு பகுதி இன்று ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு பகுதியாக வலுப்பெற்றுள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குனர் திரு.செந்தாமரைக்கண்ணன் தெரிவித்துள்ளார்.

***********

அஷ்வின் ஓய்வு

சர்வதேச கிரிக்கெட் போட்டிகளிலிருந்து உடனடியாக ஓய்வுபெறுவதாக இந்தியாவின் நட்சத்திர வீரர் ரவிசந்திரன் அஷ்வின் அறிவித்துள்ளார்.

ஆஸ்திரேலியாவிற்கு எதிரான 3ஆவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டிக்கு பின்னர் அஷ்வின் இந்த அறிவிப்பை வெளியிட்டார்.

ஆஸ்திரேலியாவிற்கு எதிரான கிரிக்கெட் தொடரில் அடிலைடில் நடைபெற்ற முதல் போட்டியில் மட்டுமே அஷ்வின் களமிறங்கிய நிலையில் இந்த அறிவிப்பை அவர் வெளியிட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

சர்வதேச ஒருநாள் மற்றும் டெஸ்ட் கிரிக்கெட் போட்டிகளில் அதிக விக்கெட்டுகளை குவித்த இரண்டாவது இந்திய வீரர் அஷ்வின் ஆவார்.

106 டெஸ்ட் போட்டிகளில் 537 விக்கெட்டுகளை வீழ்த்தி அனில் கும்ப்ளேக்கு அடுத்தபடியாக இரண்டாவது இடத்தில் உள்ள அஷ்வின் 116 ஒருநாள் போட்டிகளில் 156 விக்கெட்டை கைப்பற்றியுள்ளார்.

2025ஆம் ஆண்டு ஐ.பி.எல் 20-20 கிரிக்கெட் போட்டியில் CSK அணியில் அஷ்வின் தொடர்ந்து விளையாடுவார்.

***********

கிரிக்கெட்

பிரிஸ்பேனில் இந்திய ஆஸ்திரேலிய அணிகளுக்கிடையிலான பார்டர் - கவாஸ்கர் கோப்பை, 3-வது டெஸ்ட் கிரிக்கெட் போட்டி ட்ராவில் முடிவடைந்தது.

முன்னதாக 275 ரன் வெற்றி இலக்குடன் களமிறங்கிய இந்தியா தனது இரண்டாவது இன்னிங்ஸில் விக்கெட் இழப்பின்றி 8 ரன் எடுத்திருந்த நிலையில் மழையால் ஆட்டம் தடைபட்டதை அடுத்து போட்டி ட்ராவானது.

252 ரன் என்ற நேற்றைய ஸ்கோருடன் தனது முதல் இன்னிங்ஸை இன்றுகாலை தொடங்கிய இந்தியா 260 ரன்னுக்கு ஆட்டமிழந்தது.

தொடர்ந்து இரண்டாவது இன்னிங்ஸை ஆடிய ஆஸ்திரேலியா 7 விக்கெட் இழப்பிற்கு 89 ரன் எடுத்திருந்த நிலையில் ஆட்டத்தை டிக்ளேர் செய்தது.

ஆஸ்திரேலியா முதல் இன்னிங்ஸ் ஸ்கோர் 445.

5 போட்டிகள் கொண்ட இத்தொடரில் இரு அணிகளும் தலா ஒரு போட்டியில் வெற்றிபெற்றுள்ள நிலையில் 4 ஆவது போட்டி வரும் 26ஆம் தேதி மெல்பர்னில் நடைபெறும்.

***********

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது

***********